செ.வெ.எண்:29 நாள்:15.08.2018

## கரூர் மாவட்டம்

# கரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருக்காடுதுறை ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப. அவர்கள் கலந்துகொண்டார்

இந்தியத்திருநாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு கரூர் மாவட்டத்தில் உள்ள் 157 ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம் இன்று (15.08.2018) நடைபெற்றது. இதில் கரூர் ஊராட்சிக்குட்பட்ட திருக்காடுதுறை ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்கள்.

கரூர் மாவட்டத்தில் உள்ள 157 கிராம ஊராட்சிகளிலும் சுதந்திர தினமான இன்று (15.08.2018) கிராமசபைக் கூட்டம் நடைபெற்றது. இதில் ஜனவரி 2018 முதல் ஜுலை 2018 முடிய கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம் குறித்தும், பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி தடை செய்தல், கிராம ஊராட்சி வளர்ச்சி திட்ட அறிக்கை ஒப்புதல் பெறுதல், தனிநபர் கழிப்பறை இல்லாதோர் விவரப்பட்டியலை வாசித்தல், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட தகுதிவாய்ந்த பயனாளிகளுக்கு ரூ.12,000 மானியம் அரசு திட்டங்களின் மூலம் வழங்கப்படுவது குறித்து தெரிவித்தல், கழிப்பறை கட்டி பயன்படுத்தும் பயனாளிகளுக்கு பாராட்டு தெரிவித்தல், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களின் பராமரிப்பு மற்றும் அவற்றின் செயல்பாடு குறித்து விவாதித்தல், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் கழிப்பறைகள் கட்டப்பட்டு பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வது குறித்து விவாதித்தல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் துாய்மை காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதை கிராமசபையில் தெரிவித்தல், 2018-19 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் பணிகளின் தொகுப்பில் சேர்க்கப்படாத மற்றும் புதிதாக எடுக்கப்பட்ட பணிகளின் விவரத்தினை கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறுதல், 2018-19ஆம் ஆண்டு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் தயார் செய்யப்பட்ட இறுதி முன்னரிமைப் பட்டியலினை கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறுதல், ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விவரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும், மகளிர் திட்டம் - பெண்களுக்கு இழைக்கப்படும் வன் கொடுமைகளுக்கு எதிராகப் போராடும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 1.00 இலட்சம் வீதம் 5 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு விருது வழங்கிட கருத்துரு கோருதல், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, ஊரக பகுதிகளில் கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல் மற்றம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல், ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் குறித்து விவாதித்தல் மற்றும் வரிவசூல் முன்னேற்றம் ஆகியவை குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது சம்பந்தமாக கிராமசபைக் கூட்டத்தில் விவாத பொருளாக வைத்து பேசப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்த்தலைவர் பேசியதாவது:

கிராமத்தின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றமாகும். ஊராட்சிகளில் வெளிப்படையான நிர்வாகம் நடைபெற வழிவகை செய்வதற்கும், கிராம மக்கள் தங்களது அடிப்படைத்தேவைகளை அவர்கள் செலுத்தும் வரிப்பணத்தின் மூலம் மேற்கொள்ள வழிவகைசெய்யவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள தீர்மானங்கள் நிறைவேற்றும் வகையில் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. எனவே பொதுமக்கள் அனைவரும் அரசின் திட்டங்கள், பயன்கள் பற்றி தெரிந்து கொள்ள கிராமசபை கூட்டத்தில் பங்கேற்க வேண்டும். ஜனநாயகத்தின் முக்கிய பங்கு கிராமசபை ஆகும். மேலும் இக்கூட்டத்தில் உங்களது ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள வரவு, செலவு கணக்குகள் குறித்து அனைத்து மக்களும் தெரிந்து கொள்ளும் வகையில் முறையாக விவாதிக்க வேண்டும். உங்களது ஊராட்சிக்குத் தேவையான குடிநீர் வசதி, சாலை வசதி, சுகாதார வளாகங்கள் உள்ளிட்ட வளர்ச்சிப்பணிகள் குறித்து அனைத்து பொதுமக்களும் விவாதித்து, இக்கூட்டத்தின் வாயிலாக அவற்றை தீர்மானமாக நிறைவேற்றி அத்திட்டங்களை பெற்றிடலாம்.

கிராமப்புறங்களில் வாழும் ஏழை, எளிய பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அரசு செயல்படுத்தும் மக்கள் நலத்திட்டங்களை பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும், ஊராட்சிகளின் வருமானத்தை பெருக்குவதற்கான வழிமுறைகள் குறித்தும் இக்கூட்டத்தின் வாயிலாக விவாதித்து

அவற்றை செயல்படுத்துதல் உள்ளிட்ட செயல்களில் பொதுமக்கள் அதிகளவு ஆர்வம் காட்ட வேண்டும்.

கிராமப்புறங்களில் வாழும் அனைத்து பொதுமக்களும் நோய் நொடியின்றி வாழ்வதற்கு தங்கள் சுற்றுப்பறங்களை தூய்மையாக பராமரிக்க வேண்டும். அதன்படி பொதுமக்கள் அனைவரும் தங்கள் இல்லங்களில் தனிநபர் இல்ல கழிப்பறைகளை அமைப்பதுடன், அவற்றை முறையாக பயன்படுத்தவும் முன்வர வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், தாந்தோணி அருள்மிகு கல்யாண வெங்கடரமண சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமபந்தி விருந்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி எஸ்.கவிதா, மகளிர் திட்ட அலுவலர் திரு.கே.ஏ.சுப்பிரமணியம், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.நாகராஜன், வருவாய் கோட்டாட்சியர் திரு.கு.சரவணமூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பரமேஸ்வரன், திருமதி செல்வி, வட்டாட்சியர் (மண்மங்கலம்) திருமதி கற்பகம் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**